மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்கட்டு பகுதிகளிலே குறிப்பாக, காவிரியாற்றுப் பாசன பகுதி, பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனப் பகுதி, பெரியாறு, வைகை பாசனப் பகுதி போன்றவைகளை முன்னால் வைத்து அவைகளுக்கு ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கிறது. அதற்காக அவைகளைப் பாசன பிரிவு நதிப் பிரதேசமாகப் பிரித்து பின்னர் ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்களை அமைத்தால் நன்றாக இருக்கும் என்று அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. அவைகள் மீண்டும் மானியக் கோரிக்கைகள் வருகின்ற நேரத்திற்குள் முடித்துத் தரவேண்டும் என்கின்ற அடிப்படையிலே வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆயக்கட்டு ஆலோசனைக் குழு என்று அமைக்கப்படுவது காவிரி போன்ற ஜீவநதி ஆற்றுப் பகுதிகளுக்கு மட்டுமா அல்லது கிணறுகள், ஏரிகள், பாசனத்திற்கு உபயோகப்படும் கிணறுகள், ஏரிகளுக்கு தனியார் ஆயக்கட்டு உரிமையாளர் களுக்கும் இத்தகைய ஆயக்கட்டு அமைக்கப்படுமா என்பதை அமைச்சர் அறிவிக்க முடியுமா? அப்படி அமைக்காவிட்டால் எல்லா இடங்களுக்கும் இந்த ஆலோசனைக் குழுக்கள் அமைத்து பரிசீலனை செய்ய முடியுமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றுப்பாசனப் பகுதிகளை மையமாக வைத்துத் தான் இத்தகைய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அந்த ஆலோசனை குழுக்களில் சர்வ கட்சித் தோழர்களும் இடம் பெறுகின்ற முறையிலே அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 376.

திரு. மு. அம்பிகாபதி : தயவுசெய்து இன்னொரு கேள்வி சார், தண்ணீர் விஷயமாச்சே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியை ஆரம்பித்தாயிற்றே. தனிக் கேள்வியாகப் போடுங்கள். பிறகு, வைத்துக் கொள்ளலாம்.

ஆழியாறு நீரைப் பயன்படுத்தல்.

*வினா எண் 376 திரு. ரா. அய்யாச்சாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம் ஆழியாறு அணையின் கொள்ளளவு குறைவாக இருப்பதால் அதிகமான தண்ணீர் கடலிலே போய் வீணாகக் கலப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க மீண்டும் ஒரு அணை கட்டும் உத்தேசம் உள்ளதா?

1979 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) ஆளியாறு அணையின் கொள்ளளவு ஆளியாறு நீர்ப் பிடிப்பு பகுதியிலிருந்து வரும் அதிகமான தண்ணீரைத் தேக்கவும் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட உயர் மட்ட நீர்த்தேக்கங்களிலிருந்து திருப்பிவிடப்படும் தண்ணீரில் ஒரு பகுதியை ஆளியாறு நீர்த்தேக்கத்தின் வழியாக பொள்ளாச்சி, வேட்டைக்காரன் புதூர் கால்வாய்களின்கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கவும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆழியாறு நீர்த் தேக்கத்தின் தற்போதைய கொள்ளளவு (3864 மி. கன அடி) குறைவு என்று அரசு கருதவில்லை.

(ஆ) இல்லை.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்த ஆளி யாறு திட்டத்தைப்போலவே, ஆனைமலை ஆறு என்று ஒரு திட்டம் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருப்பதாக அறிகின்றேன். ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது செயல் படும் என்று அறிவிக்கமுடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலையாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் அது இரண்டு மாநிலங்களுக்கிடையில் இருக்கக்கூடிய பிரச்சனை. கேரளம், தமிழகம் இரண்டும் சேர்ந்து செய்ய வேண்டிய முடிவு இது. அது குறித்து, கடந்த டிசம்பர் மாதத்தில் 19, 20 தேதி களில் தமிழக அமைச்சர்கள் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். கேரள அரசாங்கம் அதனுடைய இடமளியாறு திட்டத்தை முடித்து விட்டு, ஆனைமலையாறு திட்டத்தை எடுத்து விவாதிக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், இடமளியாறு திட்டம் இன்னும் துவக்கப்படாமலேயே 6, 7 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் கேரள அரசாங்கத்திற்கு எழுதிக் கேட்டிருக்கிறோம். இடமளியாறு திட்டத்தை அவர்கள் எடுத்தாலும் எடுக்கா விட்டாலும், ஆனைமலையாறு திட்டத்தைப் பற்றி ஆலோசனை யில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேரள அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்கான ஒப்பந்தங்கள் கூட நம் இரு மாநிலங்களுக்கிடையே இருக்கிறது. அதனால் கூடிய சீக்கிரத்தில் அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஆளியாறு அணைத் திட்டத்தில் ஆயக்கட்டு ஏக்கர் எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதோ அந்த அளவிற்குக் கூட பாசனம் கொடுக்கப்பட வில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். அந்த நிலைமையில் மேலும் 1 லட்சம் ஏக்கருக்கு மேல் பாசனத்தை ஏற்றுவதற்கும், அதற்கான நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு வருவதும் அமைச்சருக்குத் தெரியும். இவற்றை யெல்லாம் நிறைவேற்றவே பற்றாக்குறை இருப்பதால், தண்ணீர் கொள்ளளவு அதிகப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டம் பற்றிச்சொல்லியிருக்கிறார்கள். ஆளியாறு அதிலே ஒரு பகுதியாக இருந்து கொண்டு இருக்கிறது. பரம்பிக் குளம்-ஆளியாறு பாசன வசதிக்கு திட்டமிடும்போதே, 2½ லட்சம் ஏக்கர் என்று போடப்பட்டது. அதற்குப் பின்னாலே இருந்த அரசு, அதற்குப் பின்னாடி வந்த இந்த அரசும் பாசன வசதியை அதிகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, 1 லட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறும் வகையில் அந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று திட்டமிட்டு, அதற்குரிய வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இந்த ஆளியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆளியாறு கொள்ளளவு ஏறத் தாழ 3,864 மில்லியன் கனஅடியாகும். ஒரு வருஷத்திற்கு ஏறத்தாழ 7 மில்லியன் கன அடி தண்ணீர் அங்கே ரோநது முறையில் நிறுத்தப்படுகிறது. அதன் மூலமாகப் பாசன வசதி பெறும் அளவிலே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மீண்டும் உயர்த்துகிற எண்ணம் இந்த அரசின் ஆய்வில் இல்லை.

பாவனர் வடிகால் திட்டம்.

*வினா எண் 377—திரு. வி. ரகுராமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பாவனர் வடிகால் திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரால் சிபாரிசு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை செயல்படுத்துவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த பாவனர் வடிகால் திட்டம் சிதம்பரம் வட்டத்தில் மிகவும் முக்கிய மான வடிகால் திட்டமாகும். முன்பொரு வடிகால் திட்டம் 7 கோடி ரூபாய் அளவிற்குப் போடப்பட்டு, அது நேராகக் கடலில் கலப்பதற்கு வகைசெய்யப்பட்டது. அந்தத் திட்டம் ஆராயப் பட்டு வருகிறதா? இப்போது ஒரு மாற்றுத் திட்டம் அமைத்து இருப்பதாகத் தெரிகிறது. அதாவது தற்போது பெருமாள் ஏரியில்